# காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 24 சனிக்கிழமை 06.06.2020 கதிர் 213


### இனிது ரகசியம் அல்ல!

சுதந்திர தேர்தல் ஆணையகத்துக்குக் கட்டுமட்டில்லாத அதிகாரம் உண்டு என்கிறோம். தேர்தல் ஆணையகத்தின் உத்தரவு வந்தால் ஜனாதிபதி அலுவலகமே தன்னைத் திருத்திக் கொள்கிறது.

தேர்தல் சமயத்தில் நீங்கள் பட்டதாரிகளுக்கு பக்கம் 02 »»

## ஜனாதிபதி செயலணிகள் நியமனம் இராணுவமயமாக்கலின் உச்சநிலை

### மாற்றுக்கொள்ளைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 06

இரு ஜனாதிபதி செயலணிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த வாரத்தில் அமைத்தமை குறித்து மாற்றுக் கொள்கைக்கான நிலையம் தனது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் அரசமைப்பு ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்துக்குக் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும் சர்வாதிகார ஆட்சி மற்றும் இராணுவமயமாக்கலின் உச்சப் போக்குகளை வெளிகாட்டுவதாக

## ஐ.தே.கவை அழித்தது சஜித் பிரேமதாஸவே!

### மஹிந்தவின் மகன் நாமல் போட்டுத் தாக்கு

கொழும்பு, ஜூன் 06

ஐக்கிய தேசிய கட்சியின் வீழ்ச்சிக்கு முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ

# ஜனாதிபதி கோட்டா வீரத்தலைவர் அவர் ஆட்சியை அசைக்க முடியாது

### அடித்துக் கூறுகின்றார் மைத்திரி



**கொழும்பு, ஜூன் 06**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேர்மையான தலைவர். பயங்கரவாதிகளுக்கு முடிவுகட்டிய வீரத் தலைவர். நாட்டு மக்கள் பெரிதும் விரும்பிய ஜனநாயகப் பிரதிநிதி. இப்படிப்பட்டவரின் தலைமையிலுள்ள ஆட்சியை எதிரணியினர் தலைகீழாக நின்றாலும் கூட அசைக்கவும் முடியாது; கவிழ்க்கவும் முடியாது.**



## ஊரடங்குவேளை மஸ்தான் நேற்று தேர்தல் பிரசாரம்!

கொழும்பு, ஜூன் 06

முல்லைத்தீவில் நேற்று ஊரடங்குச் சட்டம் அமல் படுத்தப்பட்டிருந்தவேளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தேர்தல்

## பி.சி.ஆர். அறிக்கை இல்லாவிடின் விமான நிலையத்தில் கட்டாய பரிசோதனை

### இராஜதந்திரிகளுக்கும் கட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 06

இலங்கைக்கு வரும் இராஜதந்திரிகள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும், நாட்டுக்கு வருகை தருவதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னதாகப் பெறப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையை, விமான நிலையத்தில்

## இன்றிலிருந்து ஊரடங்குச் சட்டம் இரவு 11 முதல் அதிகாலை 4 வரை

கொழும்பு, ஜூன் 06

இன்று முதல் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை இரவு 11 மணி முதல் அதிகாலை 04 மணி வரை மட்டுமே அமுல்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

கொழும்பு மற்றும்

## யாருக்கு ஆட்சி அதிகாரம்? மக்கள் தீர்மானிப்பார்களாம்

### மஹிந்த அணி கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 06

ஐக்கிய தேசியக் கட்சியினரும், ஐக்கிய மக்கள் சக்தியினரும் அரசியல் ரீதியில் பாரிய பின்னடைவை அடைந்துள்ளார்கள். பொதுத்தேர்தலை இவர்கள் எதிர்க்கொள்வதைத்




## இனி இது ..............

வேலை வழங்க முடியாது என்றது ஆணையம். அவ்வளவுதான். ஜனாதிபதியின் உத்தரவில் அனுப்பப்பட்ட நியமனக் கடிதங்கள் கூட வாபஸ் பெறப்பட்டன.

ஐயாயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு விவகாரத்தில் தேர்தல் ஆணையம் எள் என்று கூற முன்னர் அரசு எண்ணெய்யாகி, விடயத்தை நிறுத்த முன்வந்தது.

ஆனால் தேர்தல் ஆணையத்தின் செல்வாக்கு ஓரிடத்தில்தான் செல்லவே இல்லை.

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் தேர்தலை வெற்றிகரமாக தேர்தல் ஆணையம் நடத்தி முடித்தாலும் கூட ஒரு தரப்பிடம் அதன் செல்வாக்கு – அதிகாரம் – செல்லுபடியாகாது என்றே தோன்றுகின்றது.

தேர்தல் ஆணையத்துக்கே சவால் விடும் வகையில் துணிந்து நிற்கும் அந்த அரச அலுவலகம் எது?

வடக்கு மாகாண சுகாதாரத் தரப்புத்தான்.

★ செயலாளர் தேவேந்திரனை இடம் மாற்றியமை தவறு. உடனே அவரை மீள அப்பதவியில் நியமியுங்கள்!

★ யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட நான்கு சுகாதார அதிகாரிகளை இடம்மாற்றியமை தவறு. பழைய இடங்களுக்கு அதிகாரிகளைத் திருப்பி அனுப்புங்கள்.

– இப்படி எல்லாம் தேர்தல் ஆணையம் அனுப்பிய – அடுத்தடுத்து அனுப்பிய – பல அறிவுறுத்தல்களையும் வடக்கு சுகாதாரத் தரப்புத் தூக்கிக் குப்பையில் போட்டு விட்டுத் தன்பாட்டில் இருக்கின்றது. – 'நீங்கள் செய்வதைச் செய்து பாருங்கள்!' என்று தேர்தல் ஆணையத்துக்கு மிதப்புடன் சவால் விட்டபடி.

என்ன செய்யும் தேர்தல் ஆணையம்? சிவனே என்று சக்தியில்லாமல் கிடக்க வேண்டியதுதானா?

பருத்தித்துறை மந்திகை ஆஸ்பத்திரிப் பணிப்பாளரை பெரும் ஆரவாரத்துடன் வேலையிலிருந்து கலைத்தார்கள். ஒழுங்கு விசாரணையில் அவர் மீது எந்தத் தப்பும் இல்லை என்று முடிவாகியிருக்கின்றதாம். என்ன செய்யப் போகின்றது சுகாதாரத் தரப்பு?

இப்போது முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் நியமனத்திலும் நிழல் சண்டை இழுபறி சூடு பிடித்து விட்டதாகத் தகவல். நான்கு வருடங்களில் ஆறு பேரைக் கண்ட பதவிக் கதிரை அது.

வடக்கு சுகாதார சேவைக்கு முதலில் மருத்துவம் பார்க்க வேண்டும். யார் அதற்கு உகந்த மருத்துவர்...? தெரியவில்லை. ஆண்டவருக்குத்தான் வெளிச்சம்.

–மின்னல்–

## யாருக்கு ஆட்சி....

தவிர வேறெந்த மாற்று வழிகளும் தற்போது கிடையாது. யாருக்கு ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை:–

பொதுத்தேர்தலை நடத்த எதிர்த்தரப்பினர் முன்னெடுத்த சூழ்ச்சிகள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன.

பொதுத்தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஒரு கட்சிக்குக் கிடைத்த வெற்றியல்ல. ஒட்டுமொத்த மக்களுக்கும் கிடைத்த வெற்றியாகும்.

அரசியல் ரீதியில் ஐக்கிய தேசியக் கட்சியினரும், ஐக்கிய மக்கள் சக்தியினரும் பாரிய பின்னடைவை அடைந்துள்ளார்கள்.

எதிர்த்தரப்பினர் பொதுத்தேர்தலை எதிர்கொள்வதைத் தவிர வேறெந்த மார்க்கமும் இனி கிடையாது. எத்தத் தரப்பினருக்கு ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதை மக்களே ஜனநாயக ரீதியில் தீர்மானிப்பார்கள்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் பொதுத்தேர்தலை நடத்துவது அரசின் நோக்கமல்ல. தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது சுகாதாரத் தரப்பினரின் அறிவுறுத்தல்கள் இறுக்கமான முறையில் முன்னெடுக்கப்படும் – என்றார்.

## ஜனாதிபதி கோட்டா ....

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் வைத்து கொழும்பு ஊடகவியலாளர் ஒருவருக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தேசிய அரசில் நான் ஜனாதிபதியாக இருந்தேன். மூவின மக்களின் ஆதரவுடன் நாட்டின் தலைவர் பதவியைத் தாங்கியிருந்தேன். என்னால் இயன்ற பணிகளை நான் நாட்டுக்காவும் மக்களுக்காவும் செய்தேன். இதன்போது ஒரு புறம் விமர்சனங்கள் வந்தன. மறுபுறம் பாராட்டுக்கள் குவிந்தன.

பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் இறுதிவரை எனது பதவியைத் தக்க வைத்து நடுநிலையுடன் செயற்பட்டேன். ஆனால், தேசிய அரசில் பிரதான அங்கம் வகித்த ஐக்கிய தேசியக் கட்சியினர் எனது ஆட்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் – அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் – செயற்பட்டனர். அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அணியினர் பாரிய ஊழல், மோசடிகளைச் செய்தனர். மத்திய வங்கியைக் கூட அவர்கள் விட்டுவைக்கவில்லை. அத்துடன் தங்கள் ஊழல், மோசடிகளுக்கு ஒத்துழைத்தவர்களையும் நாட்டைவிட்டுத் தப்பியோட வைத்தனர். எனினும், கடந்த அரசில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட அனைவருக்கும் தற்போதைய அரசு தக்க தண்டனைகளை வழங்கியே தீரும். குற்றவாளிகள் அனைவரும் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

இந்த நிலையில், இந்த அரசை எப்படியாவது கவிழ்த்து சிறைத் தண்டனையிலிருந்து தாம் தப்பிப்பிழைக்க வேண்டும் என்பதில் எதிரணியினர் குறியாகவுள்ளனர். அதற்காக இந்த அரசைக் கண்டபடி விமர்சிக்கின்றார்கள். ஆனால், மக்கள் எப்போதும் அரசின் பக்கமே நிற்பார்கள். நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் பெறுபேறு இதை உணர்த்தும்.

ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவின் நேர்மையான திறனை அறிந்துதான் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முழு ஆதரவு வழங்கியது. அதேபோல் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர் தலைமையிலான அரசுடன் இணைந்து எமது கட்சி போட்டியிடுகின்றது. பாரிய வெற்றியை எமது கூட்டணி பெறும் – என்றார்.

## பி.சி.ஆர். அறிக்கை ....

சமர்ப்பிக்கவேண்டும் என அரசு அறிவித்துள்ளது.

இந்தப் பரிசோதனை அறிக்கை இன்றி வருபவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனை கட்டாயம் செய்து கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பரிசோதனைகளுக்கு முகம் கொடுக்காதவர்கள் மீது தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஊரடங்குவேளை ....

பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டார் என அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் புளியங்குளம் சிறீமுருகன் ஆலயத்துக்கு அருகில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் நேற்றுத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார் எனக் கூறப்பட்டது.

## இன்றிலிருந்து....

கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்கான அனுமதியில் மாற்றங்கள் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச, தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களை நடத்திச் செல்லும் போதும், அன்றாட இயல்பு வாழ்க்கையின்போதும் கொரோனா ஒழிப்பு சுகாதார பரிந்துரைகளை முழுமையாகப் பின்பற்றுமாறு அரசு அனைத்துத் தரப்பினரிடமும் கேட்டுக்கொண்டுள்ளது.

# ஒருபோதும் மன்னிக்கவே முடியாது; உரிய தண்டனையை வழங்குங்கள்!

## தர்கா நகர் சம்பவம் தொடர்பில் அரசிடம் சஜித் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 06

அளுத்கம, தர்கா நகர் பகுதியில் விசேட தேவையுடைய சிறுவன் பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவம் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படவோ, மன்னிக்கப்படவோ முடியாததாகும். எனவே, இதனுடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன்நிறுத்தப்படுவதோடு, அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

தர்கா நகர் பகுதியில் கடந்த 25ஆம் திகதி விசேட தேவையுடைய தாரிக் அஹமட் (வயது 14) என்ற சிறுவன் பொலிஸ் அதிகாரிகள் சிலரால் அச்சுறுத்தப்பட்டுதாக்கப்பட்ட சி.சி.ரி.வி. காணொலிகள் சமூகவலைத்தளங்களில் வெளியானமையைத் தொடர்ந்து கட்சி பேதமின்றி அரசியல்வாதிகள் பலரும் தமது கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் இது குறித்து தனது ருவிட்டர் பக்கத்தில் கருத்து வெளியிட்டிருக்கும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளவை வருமாறு:–

களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த விசேட தேவையுடைய சிறுவனை அச்சுறுத்தி, உடல் ரீதியாகவும் காயமேற்படுத்திய பொலிஸாரின் செயல் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படவோ, மன்னிக்கப்படவோ முடியாததாகும். இது அனைவ ராலும் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இந்தச் சம்பவத்தால் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் விதமாகச் செயற்படும் பொலிஸாருக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன்நிறுத்தப்படுவதோடு, அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். – என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி செயலணி....

இந்தச் செயலணிகளின் நியமனங்கள் அமைந்துள்ளன என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

நாடாளுமன்றம் கலைப்பட்டு மூன்று மாதங்கள் சென்றுள்ள நிலையில் சுதந்திரமான தேர்தல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உயர்நீதிமன்றம் விசாரணை செய்ய மறுத்துள்ள போது இந்தச் செயலணிகள் அமைக்கப்பட்டமையானது நியாயமற்றது என்று மாற்றுக்கொள்கைக்கான நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் நிறைவேற்று அதிகாரத்தின் நடவடிக்கை குறித்து நாடாளுமன்ற மேற்பார்வை எதுவும் இல்லை.

இத்தகைய சூழலில், ஜனாதிபதியினால் இரண்டு செயலணிகள் அமைக்கப்பட்டமையானது, இலங்கையில் அரசமைப்பு ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்திற்குக் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும் சர்வாதிகார ஆட்சி மற்றும் இராணுவமயமாக்கலின் சிக்கலான உச்சப்போக்குகளைக் காட்டுவதாக அது சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் நல்லொழுக்கமுள்ள, ஒழுக்கமான மற்றும் சட்டபூர்வமான சமுதாயத்தை உருவாக்க ஜனாதிபதியினால் ஒரு செயலணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமை தாங்குகிறார்.

அத்துடன் படைகளின் தலைவர்கள், பொலிஸ் மற்றும் புலனாய்வுத் தலைவர்கள், சுங்கத் தலைவர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கூடுதல் செயலாளர் ஆகியோர் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தச் செயலணிக்கான அதிகாரங்கள் தெளிவற்றனவாக இருக்கின்றன. சமூக விரோத நடவடிக்கைகள் போன்ற சொற்களுக்கு குறிப்பிட்ட சட்ட அர்த்தம் இல்லை, எனவே இந்தச் செயலணி எவ்வாறான சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது என்பதைக் குறித்து அச்சம் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் பாரம்பரிய முகாமைத்துவத்துக்கான செயலணி ஒன்றும் வர்த்தமானியின் ஊடாக ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஜனாதிபதி செயலணி, வடக்கு – கிழக்கு மாகாண பௌத்த துறவிகள், தொல்பொருள் பேராசிரியர், மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர், தொல்லியல் பணிப்பாளர் நாயகம், பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு அதிகாரிகள் மற்றும் கொழும்பின் ஓர் ஊடக நிறுவனத்தின் தலைவர் ஆகியோரைக் கொண்டுள்ளது.

இதற்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமை தாங்குகிறார்.

ஒரு மதத்தின் குருமாரை மாத்திரமே கொண்டமைந்துள்ளமையால் இந்தச் செயலணி தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக மாற்றுக்கொள்கைக்கான நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது இன மேலாதிக்க உறுப்பினர்களை கொண்டிருப்பதால், இந்தச் செயலணி கிழக்கு மாகாணத்தில் வாழும் ஏனைய இன அடையாளங்களை வேண்டுமென்றே குறைமதிப்புக்கு உட்படுத்துகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளதாகவும் மாற்றுக்கொள்கைக்கான நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் பிரதிநிதித்துவம், சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றில் தாக்கங்களுடன் புள்ளிவிவரங்களை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட இந்தப் பகுதியில் கொலனித்துவமயமாக்கல் மற்றும் நிலம் கையகப்படுத்தும் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இந்தநிலையில் இந்தச் செயலணியின் நோக்கம் மற்றும் எதிர்காலத்திற்கான தாக்கங்கள் குறித்த கேள்விகள் எழுந்துள்ளன என மாற்றுக்கொள்கைக்கான நிறுவனம் தெரிவித்துள்ளது.

## ஐ.தே.கவை....

முழுப்பொறுப்புக்கூற வேண்டும். கட்சியின் உள்ளகப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் பிறரை விமர்சிப்பது பயனற்றது.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த புதல்வனும் அம்பாந்தோட்டை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளவுப்படுத்த ஆளும் தரப்பினர் எவ்வித நடவடிக்கையையும் எடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித், ஐ.தே.க. தலைமைத்துவத்துக்கும் கட்சியின் கொள்கைக்கும் எதிராகச் செயற்பட்டார். இவ்வாறான செயற்பாட்டின் காரணமாகவே ஐ.தே.க பிளவுபட்டுள்ளது. இதற்கு இவர் மாத்திரமே முழுப்பொறுப்புக்கூற வேண்டும்.

பழமை வாய்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய நிலை கவலைக்குரியது. நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் அம்பாந்தோட்டை தேர்தல் தொகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ போட்டியிட்டால் படுதோல்வியடைவார் என்பதை அறிந்தே, கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்குக் கட்சி மட்டத்தில் தீர்மானித்தார். .

அரசு பொருளாதார முன்னேற்றம் குறித்து அதிக அவதானம் செலுத்தியுள்ளது. பிற கட்சியின் உள்ளகப் பிரச்சினையில் தலையிட வேண்டிய தேவை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குக் கிடையாது – என்றார்.

# நயினை விகாரையின் வெள்ளரசுக்கு தங்க நிறத்தில் சுற்றுவேலி அமைப்பு






யாழ். நயினாதீவு நாகதீப விகா ரையின் தங்க முலாம் சுற்று வேலி அமைக்கப்பட்டு விசேட பூஜை நடை பெற் றது.

யாழ்ப்பாண பாதுகாப்புப் படை களின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தலைமையில், நயினாதீவு நாகதீப விகாரையின் விகாராதிபதி நவத கல பதும கீர்த்தி தேரரின் வழிகாட் டலுக்கு அமைவாக யாழ். நயினா தீவு நாகதீப விகாரையில் அமை யப்பெற்றுள்ள வெள்ளரச மரத் தைச் சுற்றி தங்க நிறத்தி லான சுற்று வேலி அமைத்து நேற்று வழங் கப்பட்டது.

511 ஆவது பிரிகேட் படைத்தள பதி கேணல் ரோஹித ரத்னாயக் காவின் எண்ணக்கருவிற்கமைய இதற்காக பூரண நிதி அநுசரணை யுடன் ஹற்றன் நனல் வங்கியின் சட்டப் பணிப்பாளர் திருமதி துாரி ரணவீரவினால் வழங்கி வைக்கப் பட்டது.

இந்நிகழ்வில் மகா சங்க தேரர் கள், யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படை களின் கட்டளைத் தளபதி, வட மாகாண கடற்படை தளபதி, 51 ஆவது டிவினின் படைத்தளபதி, இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள், இராணுவ வீரர்கள் உட்படப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி கோட்டாபய மரம் நடுகை




மிஹிந்தலை ரஜமஹா விஹாரையில் இடம்பெற்ற அரச பொசன் விழாவின் போது, சர்வதேச சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மரநடுகையில் ஈடுபட்ட போது..

## தமிழர் மேம்பாட்டு பேரவையால் பழமரக்கன்றுகள் வழங்கி வைப்பு

ஆலையவேம்பு, ஜூன்06

கொரோனாஅச்சம்காரணமாகவாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்காக அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தமிழர் மேம்பாட்டு பேரவையினால் அம்பாறை மாவட்டம் முழுதும் 1500 வீட்டுத் தோட்ட பயனாளர்களை ஊக்குவிக்கும் பசுமைத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 500 வீட்டுத்தோட்ட பயனாளிகளை ஆலையடிவேம்பு, திராய்கேணி, அட்டப்பளம், நீலாவணை ஆகிய கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டு பயனாளிகளுக்கு பயிர்கன்றுகள் மற்றும் மரக்கறி விதைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இதன் இரண்டாம் கட்டமாக ஆலையடிவேம்பு பிரதேசசெயலகம் மற்றும் திருக்கோவில் பிர தேசசெயலகத்திற்குட்பட்ட பிரிவுகளில் கிராசேவகர் களால் தெரிவுசெய்யப்பட்ட 350 பயனாளர்களுக்கு நீண்டகாலத்திலும் குறுகிய காலத்திலும் வருமா னத்தை ஈட்டக்கூடிய மரக்கன்றுகளை நேற்று முன்தினம் தமிழர் மேம்பாட்டு பேரவையால் வழங்கப்பட்டது.





## ஒரு வாரத்தில் தென்கொரியாவில் இலங்கையர்கள் மூவர் உயிரிழப்பு

தென்கொரியாவில் கடந்த ஒரு வாரத்தில் பல்வேறு காரணங்களால் மூன்று இலங்கையர்கள் உயிரிழந்துள் ளனர். இதனைத் தென்கொரியாவுக்கான இலங்கைத் தூதரக வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

கொலை, மதுபோதையில் தவறுதலாக விழுந்து மரணம் மற்றும் தற்கொலை ஆகிய காரணங்களால் மூன்று மரணங்களும் பதிவாகியுள்ளன.

இறந்தவரின் உடல்களை நாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், கொரோனா வைரஸ் தொற்று நோயால் விமானங்கள் தடைப்பட்டுள்ளதன் காரணமாக இந்த நடவடிக்கை தாமதமாகி வருகின்றது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத் தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இறந்த நபர்கள் வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து அங்கு கூலி வேலையாளர்களாகப் பணி பணி புரிந்துள்ளனர்.

இறந்தவர்களில் ஒருவர் தென் கொரியாவிலுள்ள பிர பலமான இலங்கை இசைக்குழுவின் உறுப்பினராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தென் கொரியாவில் தற்போது 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வேலைவாய்ப்புப் பணியகத் தில் பதிவு செய்து பணியாற்றியாற்றி வருகின்றனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## மீண்டும் இருண்ட யுகம் நோக்கி...

இலங்கையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்து விட்டன.

இன்னும் இரண்டு மாதங்கள் கடந்தும் பொதுத் தேர்தல் நடக்குமா என்பது தெரியவில்லை.

அதாவது தொடர்ந்து ஐந்து, ஆறு மாதங்களுக்கு நாட்டில் நாடாளுமன்றம் இல்லை என்ற நிலைமை நீடிக்கப்போகின்றது.

இந்த நெருக்கடிக்கு ஒரே தீர்வைத் தரக் கூடிய – நியாயத்தையும் நிவாரணத்தையும் வழங்கவல்ல – ஒரே அமைப்பு நீதித்துறைதான்.

நீதித்துறையின் உயர் பீடமான – உச்சமன்றான – உயர்நீதிமன்றத்தின் கதவைத் தட்டியாயிற்று. நாட்டில் நாடாளுமன்ற ஆட்சி இல்லாத ஜனநாயக விரோதப் போக்கு நிலைமை தொடருவது ஆபத்தானது என்று அந்த உச்ச மன்றத்திடம் முறையிட்டும் பலனில்லை என்றாகி விட்டது.

அந்த முறையீடு செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. அது செவிமடுக்கப்படவேயில்லை.

நாட்டில் நாடாளுமன்றம் மூன்று மாதங்கள் கடந்தும் செயற்படாது என்ற ஆபத்து நிலை குறித்து செய்யப்பட்ட முறைப்பாட்டை செவிமடுக்க மறுத்ததன் மூலம் வரலாற்றுத்தவறு இழைக்கப்பட்டிருக்கின்றதா என்பதைக் காலம்தான் தீர்மானித்துக் கூறப் போகின்றது.

ஆனால், இத்தகைய சூழ்நிலையில் கட்டவிழும் ஜனநாயக ஆபத்துக் குறித்து என்றோ ஒரு நாளைக்கு நீதித்துறையும் பதில் கூற வேண்டி நேரும் என்பதுடன், அந்த ஆபத்தால் நீதித்துறையும் கூட பாதிக்கப்படலாம் என்பதும் மறுப்பதற்கில்லை.

இந்தப் பின்புலத்தில்தான் ஜனநாயக நடைமுறைப் போக்குக்கு ஏற்பட்டுள்ள ஒரு பேராபத்துக் குறித்த மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

மூன்று மாதங்களுக்கு மேல் நாடாளுமன்றம் செயலிழந்து போய், பொதுத் தேர்தலும் நடத்தப்படாத ஆபத்து நிலைமை குறித்துச் சுட்டிக்காட்டி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டமையோடு, ஜனாதிபதி இரண்டு விசேட செயலணிகளை நியமித்திருக்கின்றமை ஜனநாயகத்துக்கு ஆபத்தான விடயம் என்று அந்த அமைப்புச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இன்றைய நிலையில் நிறைவேற்று அதிகாரத்தின் எல்லை மீறிய செயற்பாட்டைக் கண்டு கொண்டு நடவடிக்கை எதனையும் எடுப்பதற்கு நாட்டில் நாடாளுமன்றமே இல்லை என்ற நிலைமை.

*“இந்தச் சந்தர்ப்பத்தில் இரண்டு விசேட ஜனாதிபதி செயலணிகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவை, சர்வதிகாரம் மற்றும் இராணுவமயப்படுத்தல் போக்கை நோக்கி நகரும் குழப்பநிலையை தந்துள்ளன. இந்த நிலைமை இலங்கையில் அரசமைப்பு ரீதியான ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்தில் மோசமான விளைவை ஏற்படுத்தக் கூடியன.”* – என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

அது மட்டுமல்ல, இந்த விடயம் தொடர்பில் தனது ஆழ்ந்த சிரத்தையையும் அது வெளிப்படுத்தியுள்ளது.

உண்மையில் மீண்டும் ஓர் இருண்ட யுக ஆட்சிக்கான அத்திவாரம் கனகச்சிதமாக அமைக்கப்படுவதையே ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை அச்சத்துடன் நமக்கு நினைவூட்டுகின்றது.

அதுவும் ‘சமூக விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துதல்’ என்ற திறந்த ஒரு குறிப்பின் கீழ் சம்பந்தப்பட்ட படை அதிகாரிகள் குழுவுக்கு தெளிவற்ற வாசகங்களின் மூலம் வழங்கப்படும் அதிகாரங்கள் கட்டுமட்டில்லாத வகையில் பிரேயோகிக்க தக்கவை என்கின்றன அந்த விசேட செயலணி நியமனம் பற்றிய அறிவிப்பின் சொல்லாடல்களுக்குக் கருத்துக் கூறும் சட்ட வட்டாரங்கள்.

நிறைவேற்று அதிகாரத்தின் செயற்போக்குகளைக் கட்டுப்படுத்தக் கூடிய வழமையான ஜனநாயக முறைகள் செயலிழந்திருக்கும் சமயத்தில் சந்தர்ப்பம் பார்த்து இந்த இரு விசேட செயலணிகளையும் ஜனாதிபதி திடுதிப்பென அறிவித்து, செயற்படுத்த முனைந்திருக்கின்றமை பெரும் சந்தேகத்தையும், பீதியையும் தோற்றுவித்திருக்கின்றன அந்த அமைப்பு கூறுவது புறம் ஒதுக்கத்தக்கதல்ல.

இலங்கையில் யுத்த முடிவுக்குப்பின்னர் உருவாக்கப்பட வேண்டிய நல்லிணக்கம் மற்றும் நிலைமாறு கால நீதியை நிலைநிறுத்தல் ஆகியவற்றில் ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைகள் பெரும் பாதிப்பையும், பின்னடைவையும் ஏற்படுத்தும் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் எச்சரிப்பது மிக முக்கியமானது.

சர்வதேசத்தின் காதுகளில் இந்த மோசமான நிலைமை பற்றிய எச்சரிக்கை விழுமா? தெரியவில்லை.

# வாக்குச் சீட்டு அச்சிடுதல் இடைநிறுத்தப்படவில்லை

## மஹிந்த தேசப்பிரிய விளக்கம்



நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் இடைநிறுத்தப்பட்டது என வெளிவரும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய நேற்று தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (நாளை) சுமார் 06 மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுக்களை அச்சிட்டு நிறைவு செய்ய முடியும் என அச்சக மா அதிபர் தன்னிடம் தெரிவித்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாக்குச்சீட்டு அச்சிடும் பணி இடைநிறுத்தப்படவில்லை. 06 இயந்திரங்களில் 05 இயந்திரங்களின் மூலம் அச்சிடும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஓர் இயந்திரத்தில் அச்சிடும் பணிகளின்போது மாவட்டமொன்றின் அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களின் எண்ணிக்கை குறித்த முரண் நிலையால் அதனைப் பரிசீலனைக்கு உட்படுத்துவதற்காக இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனினும், அதுவும் அச்சிடுவதற்குத் தற்போது தயார்ப்படுத்தப்படுகின்றது.

அரச அச்சக மா அதிபர் குறிப்பிடுவதற்கமைய ஞாயிற்றுக்கிழமை (நாளை) குறைந்தது 06 மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணி நிறைவடையும்.

வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணிகள் எந்த விதத்திலும் இடைநிறுத்தப்படவில்லை - என்றார்.

# பாலைவன வெட்டுக்கிளிகளின் அனர்த்தம் இலங்கையையும் தாக்கும் சாத்தியம் உண்டு

## கன்னொருவ விவசாய தகவல், தொழில் நுட்ப நிறுவன அதிகாரி எச்சரிக்கை



இலங்கைக்கு பாலைவன வெட்டுக்கிளிகள் வரக்கூடிய அனர்த்த நிலைக்கு சாத்தியம் காணப்படுவதாக கன்னொருவ விவசாய தகவல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவி பணிப்பாளர் சனத் எம். பண்டார எச்சரிக்கை செய்துள்ளார்.

தற்போது, கேகாலையில் ஆரம்பமான பயிர்களை தாக்கும் மஞ்சள் புள்ளிகளைக்கொண்ட வெட்டுக்கிளிகள் மேலும் பல மாவட்டங்களுக்கு வியாபித்துள்ள நிலையில், பாலைவன வெட்டுக்கிளிகள் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்கக் காடுகளிலும் பாலைவனங்களிலும் உற்பத்தியாகும் இந்த வெட்டுக்கிளிகள், தற்போது ஆபிரிக்காவில் இருந்து இந்தியா வரையில் வியாபித்துள்ளன.

இந்நிலையில், விவசாயிகள் பாலைவன வெட்டுக்கிளிகள் தொடர்பில் அவதானத்துடன் செயல்பட வேண்டுமென பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

‘லோகஸ்ட்’ என்றழைக்கப்படும் வெட்டுக்கிளிகள் வகைகளில் ஒன்றான இந்த பாலைவன வெட்டுக்கிளிகள் ஒரு சதுர கிலோ மீட்டரில் கோடிக்கணக்கில் இனப் பெருக்கம் செய்யும் ஆற்றல் பெற்றவை. இதன் ஆயுட்காலம் சராசரியாக 6 மாதங்கள் ஆகும்.

# ஜீவனின் வெற்றி உறுதியாம்!

ஜீவன் தொண்டமானின் வெற்றி உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் மக்களின் பேராதரவோடு அவரை நாடாளுமன்ற ஆசனத்தில் அமரவைப்பது உறுதியென்றும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிக்காரியதரசியும் மத்திய மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவையடுத்து, நுவரெலியா மாவட்ட வேட்பாளராக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இளைஞரணி பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் களமிரக்கப்பட்டுள்ள நிலையில், அவர் நேற்று முன்தினம் வேட்புமனுவில் கையொப்பமிட்டார்.

இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே, மருதபாண்டி ராமேஷ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

ஜீவன் தொண்டமான், வேட்பு மனுவில் கையொப்பமிட்ட மறுகணமே அவரது வெற்றி உறுதிசெய்யப்பட்டு விட்டதாகவும் மக்களும் இன்றுவரையில் பேராதரவை வழங்கி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்ததோடு, அப்பேராதரவோடு, நாடாளுமன்ற ஆசனத்தில் அவரை அமரவைப்போம் என தெரிவித்தார்.

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் வேட்பாளர் இடத்தை, தற்போது ஜீவன் தொண்டமான் நிரப்பியுள்ளார் என்றும் ஆறுமுகன் தொண்டமானுக்கு வழங்கிய அதே ஆதரவை, மக்கள் ஜீவன் தொண்டமானுக்கு தற்போது வழங்கி வருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





# கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் தென் சீனக் கடலில் பீஜிங் ஆதிக்கம்

## குற்றம்சாட்டுகிறது அமெரிக்கா

கொரோனா வைரஸ் குறித்த நெருக்கடிகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தென் சீனக் கடல் பகுதியில் சீனா தனது ஆதிக்கத்தை அதிகரித்துள்ளதாக அமெரிக்கா குற்றம்சாட்டுகிறது. அந்தப் பகுதியில் கடற்படை நடவடிக்கைகளைச் சீனா கொரோனா காலப் பகுதியில் அதிகரித்திருக்கிறது என்று ஜப்பானில் உள்ள அமெரிக்கப் படைகளின் தளபதி தெரிவித்துள்ளர். சீனாவால் உரிமைகோரப்படுகின்ற குறித்த பகுதியில் பயணிக்கின்ற கப்பல்களைத் துன்புறுத்துவதில் சீனாவின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என்று ஜப்பானில் உள்ள அமெரிக்கப் படைகளின் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் கெவின் ;னைடர் மேலும் தெரிவித்தார். கொரோனா நெருக்கடியின் போது சீனாவின் தென்சீனக் கடல்சார் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதைக் கண்டோம், அங்கு ஜப்பானுடன் முரண்பாடும் நிலவுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். குறித்த பகுதியில் நடக்கின்ற தமது கடல் நடவடிக்கைகள் அமைதியானவை என்று சீனா கூறுகிறது. கொரோனா வைரஸைப் பற்றி விரைவாக வெளியுலகுக்கு எச்சரிப்பதற்குச் சீனா தவறிவிட்டது என்ற அமெரிக்காவின் குற்றச்சாட்டையடுத்து இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

### தென் சீனக் கடல் விவகாரம்

தென் சீனக் கடல் பகுதியை அந்தப் பகுதியிலுள்ள பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா உள்ளிட்ட பிற நாடுகளும் உரிமை கோருகின்றன. ஆனால் சீனா அங்கு செயற்கைத் தீவுகளை உருவாக்கி இராணுவத் தளங்களை நிறுவியுள்ளது. ஆசியாவில் அமெரிக்கப் படைகள் அதிகளவில் ஜப்பானில் முகாமிட்டுள்ளன. ஜப்பானுக்குப் பாதுகாப்பு அளிப்பது மட்டுமல்லாமல், தென் சீனக் கடல் பகுதியில் சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதைத் தடுப்பதும் அவர்களின் திட்டமாக இருந்துவருகிறது.

# அனைவருக்கும் பரிசோதனை சீனாவில் புதிய நடைமுறை!

சீனாவில் மீண்டும் கொரோனா அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்ற நிலையில், வுஹான் நகரைத் தொடர்ந்து 28 இலட்சம் பேரைக்கொண்ட மேலும் ஒரு நகரில் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சீனாவில்கொரோனா தொற்று குறைந்து வந்த நிலையில் அங்கு இயல்பு வாழ்க்கை திரும்பியிருந்தது. எனினும் சில இடங்களில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. குவாங்டாங் மாகாணத்தில் ஒருவருக்கு வெளிநாட்டு தொடர்பின் மூலம் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது. அதேபோன்று, சீனா முழுவதும் 326 பேருக்கு எந்தவித அறிகுறியும் இல்லாமல் கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிசெய்யப்பட்டது. சீனாவில் 1 கோடியே 12 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டுள்ள வுஹான் நகரில் உள்ள அனைவருக்கும் கொரோனா பரிசோதனை செய்யப்படுகிறது. இந்த நிலையிலேயே சீனாவின் ஹிலோங் ஜியாங் மாகாணத்தில், முடஞ்சியாங் நகரத்தில் உள்ள 28 இலட்சம் மக்களுக்கும் கொரோனா பரிசோதனை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அங்கு 15 பேருக்கு எந்தவித அறிகுறியும் இல்லாமல் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையிலேயே அனைவருக்கும்கொரோனா பரிசோதனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.







அமெரிக்காவில் பொலிஸாரின் பிடியில் இறந்த கறுப்பினத்தவரான ஜோர்ஜ் ஃபிளாய்ட்டுக்கு நீதிகோரிப் பிரிட்டனின் லண்டன் நகரிலுள்ள டாக்னிங் வீதி அருகே முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் ஈடுபட்ட கறுப்பினத்தைச் சேர்ந்த போராட்டக்காரர் ஒருவரின் கழுத்தை வெள்ளையினப் பொலிஸ் அதிகாரி ஒருவர் நசுக்குகிறார். நன்றி ரெய்டர்ஸ்.

# சீனாவுக்கு ஆதரவாக களத்தில் வடகொரியா

சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கில் சீனா மேற்கொள்கின்ற நடவடிக்கைகளுக்த் தமது ஆதரவைத் தெரிவிப்பதற்காக வட கொரியாவின் அயலுறவு அமைச்சர் சீனத் தூதரைச் சந்தித்ததாக வட கொரியாவின் அரச செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது. ஹொங்கொங் பிரச்சினை, சீனாவின் உள்நாட்டு விவகாரங்கள் ஆகியவற்றில் ஏற்படுகின்ற வெளிநாட்டுத் தலையீடுகள் சீனாவின் இறையாண்மையை மீறுகின்றன. இதனால் தேசிய இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைக் காப்பதற்குச் சீன அரசுக்கு வடகொரியா ஆதரவளிக்கும் என்று அயலுறவு அமைச்சர் ரி சோன் குவோன் மேலும் கூறியுள்ளார். வட கொரியாவின் இந்த ஆதரவுக்குச் சீனத் தூதர் லி ஜின்ஜுன் நன்றி தெரிவித்தார்.

# பூமிக்கு அருகில் இராட்சத கற்கள்



5 விண்கற்கள் இன்றும் நாளையும் பூமிக்கு மிக அருகில் கடந்து செல்லும் என்று நாசா தெரிவித்துள்ளது. விண்வெளியில் மில்லியன் கணக்கில் சிறு கற்களும், உலோகப் பாறைகளும் மிதந்து கொண்டிருக்கின்றன. இந்த விண்கற்கள் சில பூமியை நோக்கி வரும்போது ஈர்ப்பு விசை காரணமாக அதிவேகத்தில் அண்மைக்கு வரும். இந்த நிலையில் பெரியளவிலான விண்கற்கள் உட்பட 5 விண்கற்கள் இன்றும் நாளையும் பூமிக்கு மிக அருகில் கடந்து செல்லும் என்று நாசா தெரிவித்துள்ளது. இதில் 24 முதல் 54 விட்டம் உள்ள 2020 கே.என்.5 என்று பெயரிட்ட விண்கல் 62 இலட்சம் கிலோ மீற்றர் தூரத்தில் பூமியைக் கடந்து செல்கிறது. அதைத் தொடர்ந்து 2020 கே.ஏ.6 என்ற விண்கல் 44.7 லட்சம் கிலோ மீற்றர் தூரத்திலும், 2020 என்.என்.4 என்ற விண்கல் சுமார் 50.9 லட்சம் கிலோ மீற்றர் தூரத்திலுமாகப் பூமியைக் கடந்து செல்ல உள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.



# லிபியப் படைகளின் தாக்குதலில் முக்கிய தளம் கைப்பற்றப்பட்டது

திரிபோலிக்கு அருகேயுள்ள தர்ஹவுனா பகுதியில் நிலைகொண்டிருந்த ஆயுததாரி கலீஃபா ஹப்தாரின் முக்கிய கோட்டையை லிபியப் படைகள் கைப்பற்றியுள்ளதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்திவெளியிட்டன. லிபியாவின் தலைநகர் திரிபோலியின் தென்கிழக்கில் உள்ள மலைகளில் அமைந்துள்ள தர்ஹவுனா, தலைநகர் திரிபோலி மீது தாக்குதல்களை மேற்கொள்வதற்கு ஏற்ற தளமாகச் செயற்பட்டது. இது குறித்து லிபிய அரசு வெளியிட்ட அறிக்கையில், தமது படைகள் நான்கு பக்கங்களில் இருந்து நுழைந்த பின்னர் தர்ஹவுனாவைக் கைப்பற்றியதாகவும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் ஆயுதங்கள் மற்றும் ட்ரோன்களுடன் வேகமாக நகர்ந்து தாக்குதல்களை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. லிபியாவின் சில பகுதிகளிலுள்ள எண்ணெய் வயல்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ஹப்தாருக்கு ர;யா, எகிப்து மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியன ஆதரவு அளித்துள்ளன. லிபியப் படைகளுக்குத் துருக்கி உட்பட்ட சில நாடுகள் ஆதவளிக்கின்றன.

## முருகன் தாயுடன் பேசும் விவகாரம்

# நீதிமன்றம் கேட்ட கேள்வி!



இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றுள்ள முருகன், வெளிநாட்டில் வாழும் அவருடைய தாயுடன் தொலைபேசி மூலமாகப் பேசுவதற்கு மனிதாபிமான அடிப்படையில் கூட அனுமதி வழங்க முடியாதா? என்று சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதியாக வேலூர்ச்சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகனின் தந்தை சமீபத்தில் காலமானார். இந்த நிலையில், இலங்கையில் வசிக்கும் முருகனின் தாய் மற்றும் லண்டனில் வசிக்கும் தங்கையுடன் 'வட்ஸ் அப்' செயலி மூலம் உரையாடுவதற்கு முருகனுக்கும், நளினிக்கும் அனுமதியளிக்குமாறு உத்தரவிடக் கோரி நளினியின் தாய் பத்மா சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

அப்போது, மனுதாரர் தரப்பில் முன்னிலையான வழக்கறிஞர், 'நளினி, முருகன் இருவரையும் வெளிநாடுகளில் வசிப்பவர்களுடன் பேச அனுமதித்தால், அது பன்னாட்டு அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என அரசதரப்பில் கூறப்படும் குற்றச்சாட்டுகளை ஏற்க முடியாது, அதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை.

மற்றக் கைதிகளுக்கு அனுமதியளிக்கும் போது, முருகனுக்கும், நளினிக்கும் மட்டும் அனுமதி மறுப்பது அடிப்படை உரிமையை மீறிய செயல் – என்று வாதிட்டார்.

இதுகுறித்து அரசின் கருத்தை அறிந்து தெரிவிப்பதாகக் கூறிய அரச வழக்கறிஞர், உள்நாட்டில் வசிக்கும் உறவினர்களுடன் தான் கைதிகள் பேச அனுமதிக்கப்படுகிறது எனவும், உறவினர்களுடன் தொலைபேசியில் பேசுவதை உரிமையாகக் கோர முடியாது எனவும், இது சம்பந்தமாக முடிவெடுக்க சிறை கண்காணிப்பாளருக்கு மட்டுமே அதிகாரம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி 'தாயுடனும், தங்கையுடனும் பேச அனுமதித்தால் பன்னாட்டு அளவில் தாக்கம் ஏற்படும் எனக் கூறும் அரசு, அவர்களை விடுதலை செய்யத் தீர்மானம் நிறைவேற்றிய போது பன்னாட்டுத் தாக்கம் குறித்துப் பரிசீலிக்கவில்லையா? விடுதலை செய்ய தீர்மானம் நிறைவேற்றிய நிலையில் பேசத் தடை விதிப்பது நியாயமா? எனக் கேள்வி எழுப்பினார். பின்னர், வழக்கு விசாரணையை ஜூன் மாதம் 12ஆம் திகதிக்குத் தள்ளிவைத்தார்.

## இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு கிட்டும் என சீனா நம்பிக்கை


இந்தியாவுடனான எல்லைப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு எட்டப்படும் என சீனா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

எல்லைப்பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளுக்கு இடையே நாளை, பேச்சு நடைபெறும் சூழலில், பீஜிங்கில் செய்தியாளர்களிடம் பேசிய சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் Geng Shuang, தங்களிடம் முழு அளவிலான எல்லைப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிமுறைகள் உள்ளன எனக் குறிப்பிட்டார்.

இந்தியா - சீனா இடையே 3 ஆயிரத்து 500 கிலோ மீட்டர் எல்லையில், கிழக்கு லடாக்கின் Pangong Tso, Galwan Valley மற்றும் Demchok ஆகிய 3 இடங்கள் தொடர்பாக கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக பிரச்சினை நீடித்து வருகிறது.

ஏற்கனவே, பத்து முறை நடந்த பேச்சுகலில் எவ்வித முன்னேற்றமும் எட்டப்படாத சூழலில், நாளை நடைபெறும் உயர் மட்ட இராணுவ அதிகாரிகள் பங்கேற்கும் பேச்சு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.





# 'நாமே தீர்வு'
## கமல் புதிய திட்டம்

'நாமே தீர்வு' என்ற தன்னார்வலர்கள் திட்டத்தை ஆரம்பித்துள்ளார் நடிகர் கமல் ஹாசன். உலக சுற்றுச் சூழல் தினமான ஜூன் 5அன்று இந்தத் திட்டத்தைத் தொடங்கியுள்ளார் கமல்.

இது தொடர்பாக கமல்ஹாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

கொரோனாவுக்கு எதிராக நடக்கும் போரில் என்ன செய்வார்கள் என்று காத்திருந்தும், ஏதாவது செய்வார்கள் என்று பார்த்திருந்தும் களைத்தவர்களின், நாமாவது ஏதாவது செய்ய வேண்டும் என்ற சிந்தனை தான் நாமே தீர்வு. இந்த நோயின் தீவிரத்தை மருத்துவர்கள் கட்டுப்படுத்தும் நேரத்தில், அடிமட்ட மக்கள் பசியால் பாதிக்கப்படக் கூடாது.

பசி, வறுமையின் பாதிப்பு கொரோனாவை மிஞ்சியிருக்கும். இப்பொழுது அதை ஒரு இயக்கமாக முன்னெடுக்கிறோம். சக மனிதனுக்கு தீர்வுகளை வழங்கிட, மக்களால் மக்களுக்காக முன்னெடுக்கப்படும் இயக்கம் இது. சென்னையை நாம் அனைவரும் இணைந்து மீட்போம். நாமே தீர்வு - என்றார்.

## புதிய திட்டங்களுக்கு இனி நிதி கிடையாது!

செலவுகளைக் கட்டுப்படுத்தவேண்டியிருப்பதால் இனிவருகின்ற ஒரு ஆண்டுக்குப் புதிய திட்டங்களுக்கு நிதி ஏதும் ஒதுக்கப்படாது என்று இந்திய நிதி அமைச்சகம் தெரிவித்தது.

கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளுக்கு ஏராளமான நிதி செலவிடப்படுவதால், பல்வேறு வகைகளில் செலவுகளை குறைத்து சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது இந்திய அரசு.

இந்தநிலையில், சிலசிறப்புதொகுப்புத்திட்டங்களைத் தவிர, எந்தவொரு புதிய திட்டத்தையும், துணைத் திட்டத்தையும் அரசு ஆரம்பிக்காது என்று இந்திய நிதி அமைச்சகம் தெரிவித்தது. புதிய திட்டங்களுக்கான கோரிக்கைகளை அனுப்புவதை மத்திய அமைச்சகங்கள் நிறுத்த வேண்டும் என்று இந்திய அரசு கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தனிமைப்படுத்துவதை எதிர்த்து வழக்கு தாக்கல்

### பிரிட்டிஷ் வானூர்தி நிறுவனம் செய்யும்




வானூர்திப் பயணிகளைத் தனிமைப்படுத்துகின்ற பிரிட்டன் அரசின் திட்டத்துக்கு எதிராக பன்னாட்டு எயார் லைன்ஸ் குழுமம் வழக்குத் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டு வானூர்திப் போக்குவரத்து தொடங்கி உள்ளது. இந்த நிலையில் வெளிநாடுகளில் இருந்து பிரிட்டனுக்குள் நுழைகின்ற வானூர்திப் பயணிகள் அனைவரும் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள் என்று பிரிட்டன் அரசு அறிவித்தது.

இந்த அறிவிப்பால் வானூர்தி நிறுவனங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளன. இந்த நிலையில், அரசின் தனிமைப்படுத்தும் திட்டத்துக்கு எதிராக, வழக்குத் தொடர்வது பற்றி பரிசீலனை செய்து வருவதாக பன்னாட்டு எயார் லைன்ஸ் குழுமத்தின் தலைமை நிர்வாகி தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வழக்கறிஞர்களுடன் ஆலோசனை நடத்தி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## அமெ. அதிபர்களின் அரசியல் அணுகுமுறை சர்ச்சையானது

### ஜேர்மன் அதிபர் தெரிவிப்பு



ஜோர்ஜ் ஃபிளாய்ட் கொல்லப்பட்டமை குறித்துக் கருத்துத் தெரிவித்த ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கல், நிறவெறி கொடுமையானது, அமெரிக்க அதிபர்களின் அணுகுமுறை சர்ச்சையான ஒன்று என்றார். அமெரிக்காவில் தொடரும் போராட்டங்களுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்கு எதிராகப் பன்னாட்டு அளவில் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்தச் சூழலில், ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கலிடம் 'ஜோர்ஜ் ஃபிளாய்டின் கொலை மிகவும் கொடுமையானது. நிறவெறி என்பது கொடுமையானது' என்று தெரிவித்துள்ளார். ஜேர்மனியப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அமெரிக்காவில் நடக்கும் போராட்டத்தில் ட்ரம்ப்பின் அணுகுமுறை குறித்துக் கேட்டதற்கு, 'அமெரிக்க அதிபர்களின் அரசியல் அணுகுமுறை சர்ச்சையான ஒன்றுதான்' என்று ஏஞ்சலா மெர்கல் தெரிவித்தார்.

# தினம் ஒரு தலைப்பு
# சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்






படம் 1

**வி. கேதிஷா - தரம் 2**
**தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி**

**நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'வேள்வி' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிக மாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்த வர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.**



படம் 2

**படம் 2**
**அபர்ணா உதயகுமார் - தரம் 6**
David Leeder Middle School, Canada.

*இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'முயலும் ஆமையும்'*

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

பி. பிரவீன் - தரம் 11
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

பி. துர்ஷிகா - தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

ஆர். பிரிதி - தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

இ. கார்த்திகன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

என் வித்யாசாகர் - தரம் 9
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஆர். யதுஷன் - தரம் 7
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ராமதாசன் ஹர்சிகா - தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

வி. அவிக்ஷிகன் - தரம் 1
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

எட்ரியன் லூக் ஜோன் - தரம் 8
ஓகேஜ சர்வதேச பாடசாலை, வத்தளை

கே. நிருஜிகா - தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

மாதுரி மகிந்தன் - தரம் 8
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

கி. துாந்த் - தரம் 8
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

ப. சஜிதன் - தரம் 9
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

இ. லதுஷன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

ஏ. அக்சயன் - தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

த. கவின் - தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

காலைக்கதிர் Kalaikkathir

முயலும் ஆமையும்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு
சித்திரப்போட்டி

**இன்று (06/06/2020) தலைப்பு**
**முயலும் ஆமையும்**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**









யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த சிறுகைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடும் 105 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மலேசியா - இலங்கை சங்கங்களின் சம்மேளனத்தின் (FOMSO) நிதியுதவியுடன் ஒவ்வொருவருக்கும் ரூபா இரண்டாயிரத்து ஐநூறுக்கும் அதிக பெறுமதியான பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த செயற்திட்டம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலகங்களில் அரச அதிபர்களின் தலைமையில் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் றோட்டரி கழகத்தின் தலைவர் கருத்து தெரிவிக்கையில், கடந்த காலங்களில் எமது கழகத்தால் இவ்வாறான பல்வேறு செயல்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன, இந்த உதவிகளை வழங்கிய FOMSO விக்கும் ஏனையோருக்கும் தாம் நன்றி தெரிவிக்கின்றோம். - என்றார்.

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

# சூறை ஆடி விட்டார்கள்!

**யாழ் பொதுநூலக எரிப்பு தினம் ஜூன் 01 ஆகும்**

ஏடுகளாய் இருந்தவற்றை எப்படியோ கண்டெடுத்து
நாடெல்லாம் நன்மைபெற நல்ல உள்ளம் விரும்பியாதால்
ஓடாக உழைத்து நிதம் உருப்படியாய் செய்தமையே
வாடாது நிற்கின்ற வகைவகையாம் நூல்களெலாம்

எத்தனையோர் உழைப்பினிலே இங்குவந்த புத்தகங்கள்
எத்தனையோ மேதைகளை எமக்களித்து நின்றதுவே
நித்தமும் நாம்படிப்பதற்கு புத்தகமாய் இருக்குமவை
எத்தனையோ சந்ததிக்கு இருக்கின்ற பொக்கிமாம்

நூல்நிலையம் இல்லையென்றால் நுண்ணறிவு வளராது
நூல்நிலையம் அருகிருந்தால் தேடிடலாம் அறிவையெலாம்
பாவலரும் நாவலரும் பலபேரும் உருவாக
நூல்நிலையம் காரணமாய் அமைந்ததனை அறிந்திடுவோம்

யாழ்ப்பாண நூலகத்தை யாருமே மறக்கார்கள்
வேண்டிய புத்தகத்தை விரைவுடனே தந்துநிற்கும்
தென்கிழக்கு ஆசியாவின் சிறந்தவொரு நூலகமாய்
சிறந்தோங்கி நின்றதனை தேசமே தானறியும்

எத்தனையோ வகையான புத்தகங்கள் இருந்ததங்கே
அத்தனையும் படிப்பவர்க்கு அருமருந்தாய் அமைந்தப்போ
சொத்தாக மதித்துமே புத்தகத்தைக் காத்தார்கள்
சுவையறியா அரக்கர்களோ சூறையாடி விட்டார்கள்

கற்றுணர்ந்தோர் வாழ்ந்தவிடம் கல்விக்கூடம் நிறைந்தவிடம்
கண்ணியத்தின் உறைவிடமாய் கருத்திலே நின்றவிடம்
பெற்றவர்கள் பிள்ளைகளை பெரிதாக்க நின்றவிடம்
பித்தர்களின் வெறியாலே அத்தனையும் பொசுங்கியதே

கோவிலுக்கு நிகராகக் கொண்டாடும் நூலகத்தை
கொடுங்கோலர் பலர்சேர்ந்து கொழுத்தியே விட்டார்கள்
தாவீது எனும்சாது தன்னளவில் தாங்காது
ஓய்வெடுத்து நின்றதுவே உலுத்தர்களின் செயலாலே

நூல்நிலையம் எரித்தவர்கள் நூறுமுறை பணிந்தாலும்
தலைசிறந்த படிப்பாளி தாவீது வருவாரா
எரித்தவர்கள் மனத்தினிலே இரக்கமே வாராதா
அரக்ககுணம் இன்னுமே அழியாமல் இருக்கலாமா

குத்தென்றான் ஓராள் கொழுத்தென்றான் மற்றொருவன்
சொத்தான நூல்நிலையும் சுவாலைக்குள் நின்றதுவே
எத்தனையே மகான்களது எண்ணிறந்த நூலெல்லாம்
பிதர்களின் வசமாகி பெருநெருப்பு விழுங்கியதே

**மகாதேவஐயர் ஜெயராமசர்மா, மெல்பேண்,ஆஸ்திரேலியா**

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com



# தனிமைப்படுத்தல் முகாம்களில் இன்னும் 5,000 பேர் உள்ளனர்

ஸ்ரீலங்காவில் கொரோனா சந்தேகத்தின் பேரில் ஐயாயிரம் பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்திக் கண்காணிக்கப்படுகின்றனர் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

45 தனிமைப்படுத்தல் நிலையங்களில் இவர்கள் கண்காணிக்கப்படுகின்றனர் என இராணுவத் தளபதி கூறினார்.

இதுவரை 11 ஆயிரத்து 709 பேர் தனிமைப்படுத்திக் கண்காணிக்கப்பட்டதன் பின்னர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டில் இதுவரையான காலப் பகுதியில் 1,800 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அவர்களில் 409 பேர் சமூகத்தில் இருந்து தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள்.

இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த 836 பேர் COVID - 19 தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து வருகை தந்த 551 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திங்கள் முதல் ரயில் சேவை

சகல அலுவலக ரயில் சேவைகள், இரவுநேர தபால் ரயில் சேவை, தூர இடங்களுக்கான ரயில் சேவை என்பன நாளை திங்கட்கிழமை முதல் சேவையில் ஈடுபடுத்தப்படுமென ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி பயணிக்கும் கடுகதி ரயில் சேவை மற்றும் கல்கிஸை - காங்கேசன்துறை இடையேயான குளிரூட்டப்பட்ட ரயில் சேவைகள் என்பன திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படமாட்டா என ரயில்வேப் பொது முகாமையாளர் வி. எஸ் பொல்வத்தகே குறிப்பிட்டுள்ளார்.

ரயில் பயணத்திற்கான ஆசனங்களை ஒதுக்கி கொள்ளும் வசதி வழமை போன்று இன்று முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில் நேர அட்டவணையில் ஏதேனும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டால் அது தொடர்பில் கவனத்தில் கொள்ளுமாறு ரயில் பயணிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் பயணங்களின் போது கொவிட் 19 வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு சுகாதார தரப்பினரால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளை பின்பற்றுமாறும் ரயில்வேத் திணைக்களம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

## இந்தியாவுக்கு மிக விரைவில் மேலும் 2 விமான சேவைகள்!

கொவிட் 19 இடர் காரணமாக இலங்கையில் சிக்கியுள்ள ஏனைய இந்திய பிரஜைகளை நாட்டிற்கு அழைக்கும் முகமாக மேலும் இரு விமான சேவைகளை நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஜுன் 15 ஆம் திகதி கொழும்பிலிருந்து பெங்களூருவுக்கும், ஜுன் 22 ஆம் திகதி கொழும்பிலிருந்து டெல்லி, லக்னோ மற்றும் காயா உள்ளிட்ட நகரங்களுக்கும் செல்வதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன எனக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

வந்தே பாரத் திட்டத்தின் கீழ் இயக்கப்படும் இந்த விமான சேவையில் குறிப்பாக வேலை இழந்துள்ள இந்தியர்கள், குறுகிய கால விசா வைத்திருப்போர், மருத்துவ தேவையுள்ளவர்கள், கர்ப்பிணிகள், வயதானவர்கள், உறவினர்கள் மரணம் காரணமாக திரும்ப முயற்சிப்போர் மற்றும் மாணவர்கள் போன்றோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இந்த விமான சேவை தொடர்பான தகவல்களை தூதரக இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும், ஏற்கனவே பெரும் தொகை விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ள நிலையில் பதிந்துள்ள சிறு தொகையானவர்களே இந்த விமானம் மூலம் நாடு திருப்புவர் என்றும் தூதரகம் தெரிவித்துள்ளது.

விமான பயண மற்றும் கட்டாயத் தனிமைப்படுத்தல் வசதிக்கான செலவுகள் பயணிகளால் செலுத்தப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

## மன்னார் புதிய பஸ் நிலையம் ஞாயிறு முதல் நகர சபை வசம்

மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையக் கட்டடம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாக மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்படவுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டில் சுமார் 130 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மன்னார் பஸார் பகுதியில் சகல வசதிகளுடனும் இந்த பஸ் நிலையம் அமைக்கப்பட்டது.

குறித்த பஸ் நிலையம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மதியம் 1 மணியளவில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மன்னார் நகர சபையிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட உள்ளது.

பஸ் நிலையக் கையளிப்புத் தொடர்பாக மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் வியாழக்கிழமை மதியம் மன்னார் நகர சபையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

மன்னார் நகர சபையின் செயலாளர், உப தலைவர், உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.




# மனநலம் இல்லாத முஸ்லிம் சிறுவனைத் தாக்கிய மூன்று பொலிஸ் அதிகாரிகள் பணி இடைநிறுத்தம்



அளுத்கம – தர்கா நகர், அம்பகஹ சந்தி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவலரணில் கடந்த மே 25 ஆம் திகதி கடமையாற்றிய பொலிஸாரால் 14 வயதுடைய – மனநலம் பாதிக்கப்பட்ட – சிறுவன் ஒருவன் தாக்கப்பட்டமை குறித்த சம்பவம் தொடர்பில், கடமை தவறிய குற்றச்சாட்டில் மூன்று பொலிஸார் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். சப் – இன்ஸ்பெக்டர் ஒருவர், பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் என மூவரே இவ்வாறு பணி இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

களுத்துறை பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ், களுத்துறை பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வை



யில் களுத்துறை முதலாம் பிரிவு பொலிஸ் அத்தியட்சகரால் முன்னெடுக்கப்பட்ட விசேட மேலதிக விசாரணைகளுக்கமைய இந்தப் பணி இடை நிறுத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டு, அம்மூவரும் இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

பணி இடை நிறுத்தம் செய்யப்பட்ட சப் – இன்ஸ்பெக்டரும் சார்ஜண்ட்டும் விசேட கடமைகளுக்காகக் களுத்துறை பொலிஸ் வித்தியாலயத்திலிருந்து இந்தக் காவலரணுக்கு வரவழைக்கப்பட்டிருந்தவர்கள் எனவும், கான்ஸ்டபிள் அளுத்கமை பொலிஸ் நிலையத்தை சேர்ந்தவர் எனவும் பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

இவ்வாறான பின்னணியில் சம்பவம் குறித்த விசாரணைகளை முன்னெடுக்க டப்ளியூ.ஏ.சி.ஏ.பி.பீ. எனப்படும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் துஷ்பிரயோக தடுப்பு பணியகத்தின் பொலிஸ் அத்தியட்சகரைப் பதில் பொலிஸ் மா அதிபர் பணித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அளுத்கம – தர்ஹா நகர் பகுதியில் 14 வயது சிறுவனொருவரைத் தாக்கிய காயத்துக்குள்ளாக்கியமை மற்றும் குறித்த சிறுவனை சிகிச்சைக்காக சட்டவைத்தியரிடம் அனுமதித்த போது சட்ட வைத்தியர் இனரீதியில் முறைக்கேடாக நடந்து கொண்டார் எனவும் கூறப்படும் சம்பவம் தொடர்பான விவரங்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா அவரது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

கடந்த மாதம் இடம்பெற்றதாக கூறப்படும் இந்த சம்பவம் தொடர்பில் கடந்த சில தினங்களுக்கு வரையில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை.

## நடந்தது என்ன?

தர்ஹாநகரை சேர்ந்த 14 வயதுடைய தாரிக் எனப்படும் சிறுவன் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளான். அவனுக்கு 14 வயது ஆகின்ற போதிலும் ஆறுவயது சிறுவனக்குறிய மனோநிலையிலையையே அவன் கொண்டிருக்கின்றான்.

கடந்த மேமாதம் 25 ஆம் திகதி தனது துவிச்சக்கர வண்டியில் தர்ஹாநகரில் அமைந்துள்ள அம்பஹாக நகரத்திற்கு தாரிக் சென்றுள்ளான்.

இதன்போது அப்பகுதியில் உள்ள சோதனைச் சாவடியில் இருந்த பொலிஸார் அவனைத் தடுத்துள்ளமையுடன், துவிச்சக்கர வண்டியிலிருந்த சிறுவனைக் கீழே இழுத்து தள்ளிவிட்டு தாக்கியுள்ளனர். இதன்போது சோதனை சாவடியில் ஆறு,ஏழு பொலிஸார் இருந்துள்ளனர். அவர்கள் அனைவரும் தாரீக்கை தாக்கியுள்ளமையுடன், அப்பகுதியில் சென்ற பொதுமக்கள் சிலரும் தாக்கியுள்ளனர்.

தாரீக் ஒரு மனநோயாளி என்பதினால் பொலிஸாருக்கு அவனால் உரியமுறையில் பதிலளிக்க முடியவில்லை. இதனால் பொலிஸாரினால் தாக்கப்பட்ட தாரீக் தொடர்ந்தும் அழுது கொண்டிருந்த காரணமாக பொலிஸார் அவனது கைகளை பின்னால் இழுத்துக் கட்டிமரத்தின் அருகே காணப்பட்ட மின் கம்பத்துடனும் சேர்த்துக் கட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை பலர் அவதானித்துள்ளமையுடன், அவர்களுள் ஒருவர் தாரீக்கின் தந்தையை நன்கறிந்தவர் என்பதனால் அவர் சம்பவத்தை தாரீக்கின் தந்தைக்கு தெரியப்படுத்தி அவரை சம்பவ இடத்திற்கு அழைத்து வந்துள்ளார்.

தாரீக்கை விடுவிக்குமாறும், தனது மகன் மனநோயால் பாதிக்கப்பட்டவர் என்பதையும் தாரீக்கின் தந்தை பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவரையும் திட்டிதீர்த்துள்ள பொலிஸார், தனது மகன் தாரீக் வீட்டைவிட்டு வெறியேறிமைக்குத் தானே காரணம் என்று கடிதமொன்றை தங்களுக்கு வழங்கினாலே தாரீக்கை விடுவிக்க முடியும் என்று கூறியுள்ளனர்.

பின்னர் பொலிஸார் கூறியதைப் போன்று கடிதமொன்றை கொடுத்துவிட்டு பொலிஸாரின்



பிடியிலிருந்த தனது மகனை அவர் அழைத்துச் சென்றுள்ளார்.

இதன்போது படுகாயமடைந்திருந்த தாரிக்கை பொலிஸார் மீது கொண்ட அச்சம் காரணமாக அவரது தந்தை வைத்தியசாலையில் கூட அனுமதிக்காமல் இருந்துள்ளார். பின்னர் அயலவர்கள் அவருக்கு கொடுத்த அழுத்தம் காரணமாக அவர் அருகிலிருக்கும் பொலிஸ் நிலையித்தில் இது தொடர்பில் முறைப்பாடு அளித்துள்ளார். இதன்போது அவர்கள் தந்தையே மகன் வீட்டை விட்டு வெளியேறக்காரணம் என்பதால் தங்களால் முறைபாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பொலிஸார் புறக்கணித்துள்ளனர்.

பின்னர் அப்பகுதிக்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்திற்குச் சென்று முறைப்பாடு அளித்துள்ளனர். அவர்கள் முறைப்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ள போதிலும் அவர்களின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக தோன்றாததினால், அயலவர் சிலரின் உதவியுடன் களுத்துறை மாவட்டப் பிரதி பொலிஸ்மா அதிபரிடம் இந்த சம்பவம் தொடர்பில் தெரிவித்துள்ளனர்.

இதன்போது தாரீக்கை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரும் தாரீக்கின் தந்தையும் நாகொட சட்ட வைத்தியரிடம் தாரீக்கை அழைத்துச் சென்றுள்ளனர். அவர் பொலிஸ் உத்தியோகஸ்தரைப் பார்த்து இந்தச் சிறுவனை எதற்காக இங்கே அழைத்து வந்தீர்கள் என்று கேட்டுள்ளார்.

“இவரை அங்கொடை வைத்தியசாலையில் அனுமதித்திருக்க வேண்டும். இவ்வாறான முஸ்லிம்களினாலேயே இன்று நாங்கள் முகக்கவசம் அணிய வேண்டி ஏற்பட்டுள்ளது. இவனுக்கு இது தேவை. இவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.அதனை நான் வழங்குவேன்” – என்றும் தெரிவித்து அவர் சிறுவனை மனநல வைத்தியரிடம் அனுமதிக்குமாறு கூறியுள்ளார்.

பின்னர் தாரீக் பல காலமாக மனநலம் தொடர்பில் மருந்து எடுத்துக்கொள்ளவில்லை என்றும் அவரை அங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன்போது அங்கு வந்த உளநலநிபுணர் தாரீக்கை நன்கு அறிந்திருந்தமையினால் தாரீக் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருபவர் எனக் குறிப்பிட்டு அவருக்குரிய மருந்துவகைகளையும் வழங்கி வைத்தியசாலையிலிருந்து அனுப்பிவைத்துள்ளார்.

இதற்கு பின்னர் இந்த விடயம் தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

ஆயினும் குறித்த சம்பவம் தொடர்பான சி.சி.ரி.வி. காட்சிகளையும் தாரீக்கின் தந்தை உள்ளிட்ட சிலர் இணைந்து வெளிக்கொண்டுவந்துள்ளனர்.

பொலிஸாரின் முறைக்கேடான செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு செயற்பாடுகள் தற்போது வெளியிடப்பட்டு வருகின்றன. பொலிஸார் இவற்றை மறைக்க முயற்சித்தாலும் சமூகவலைத்தளங்களின் பாவனை தற்போது அதிகரித்துள்ளமையினால் இதனை அவர்களால் முறையாக மேற்கொள்ள முடியவில்லை.

நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு காலப்பகுதியிலும் இவ்வாறான முறைக்கேடுகள் இடம்பெற்றுள்ளன எனவும் தெரியவந்துள்ளது என்று குறிப்பிட்டு, சிறுவன் தாரீக் தாக்கப்படும் சம்பவம் அடங்கிய காணொலிப் பதிவுகளைப் பலரும் பதிவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் களுத்துறை மாவட்ட பிரததி பொலிஸ்மா அதிபர் ஈ.எம்.யூ.வீ.குணரத்நவைத் தொடர்புகொண்டு வினவியபோது, இந்த விவகாரம் தொடர்பில் சிறப்பு குழு நியமிக்கப்பட்டு தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதி கோட்டாபயவின் தான்தோன்றித்தனமான தீர்மானங்களை எதிர்க்க முடியாத நிலையில் பிரதமர்

*கொழும்பு, ஜூன் 06*

**ஐம்பது வருட அரசியல் அனுபவம் இருந்தும் மஹிந்த ராஜபக்ஷவால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொள்ளும் தன்னிச்செய்யான தீர்மானங்களுக்கு எதிராக செயற்டப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறான ஒருவரை மீண்டும் பிரதமராக்குவது தொடர்பாக மக்கள் தீர்மானிக்கவேண்டும் என முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.**



ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பின் தேசியப்பட்டியல் வேட்பாளர்களின் சந்திப்பொன்று கட்சிக் காரியாலயத்தில் புதனன்று இடம்பெற்றது. இதன்போது அங்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி கோத்தாய ராஜபக்ஷ அடிக்கடி வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுகின்றார். அந்த அறிவித்தல்கள் மூலம் தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்கின்றார். இதனால் பிரதமரின் அதிகாரம் இழிவாக்கப்பட்டிருப்பதுபோல், மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரமும் அகௌரவப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதுமாத்திரமல்லாது இதன் மூலம் நிர்வாக அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்களை குப்பைக் கூடைக்கு தள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் நாடாளுமன்றம் இவ்வாறு புறக்கணிக்கப்படும்போது, பிரதமருக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இருக்கும் கௌரவம் என்ன? ஜனாதிபதியின் தான் தோன்றித்தனமான தீர்மானங்களைப் பார்த்துக் கொண்டு, பிரதமர் அமைதி காப்பதில் என்ன தெளிவாகின்றது? இருக்கும் அதிகாரங்களைக்கூட மக்களுக்காக பயன்படுத்த பிரதமருக்கு தேவையில்லை. அல்லது ஜனாதிபதி அவரையும் தனது அதிகாரத்துக்கு அடிபணிய வைத்திருக்கவேண்டும்.

மேலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐம்பது வருட அரசியல் அனுபவம் இருக்கின்றது. ஆனால் ஜனாதிபதியின் இந்த தான்தோன்றித்தனமான தீர்மானங்களை எதிர்க்க முடியாத நிலைக்கு அவர் தள்ளப்பட்டிருக்கின்றார். அப்படியான ஒருவரை எவ்வாறு மீண்டும் பிரதமராக்குவது? அதனால் பொதுத் தேர்தலில் மக்கள் இதுதொடர்பாக சிந்தித்து செயற்படவேண்டும். - என்றார்.

# கோட்டாபயவின் சகா அலிசப்ரிக்கு எதிராக சிங்கள ராவய போர்க்கொடி



ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரிக்கு நாடாளுமன்றத்திற்கான தேசிய பட்டியல் வாய்ப்பை ஜனாதிபதி வழங்கக்கூடாது என்று, புதிய சிங்கள ராவய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை பகல் ஊடக சந்திப்பை நடத்திய அந்த அமைப்பின் செயலாளர் மாகல்கந்தே சுதத்த தேரர் மேற்கண்டவாறு கோரிக்கையை முன்வைத்தார்.

அண்மையில் அல்ஜெஸீரா தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் சட்டத்தரணி அலிசப்ரி தெரிவித்த கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்துவதாக தெரிவித்த மெடில்லே பஞ்ஞாலோக்க தேரருக்கெதிராக சட்டத்தரணி 150 கோடி ரூபாவை கோரி நோட்டீஸ் விடுத்திருக்கின்றார்.

இது பௌத்த தேரர்களுக்கு எதிராக விடுக்கப்பட்டுள்ள சவால் என்பதோடு பிக்குகளுக்கு எதிரான நடவடிக்கையாகவே பார்ப்பதாக தெரிவித்த சுதத்த தேரர், ஜனாதிபதி தலையீடு செய்து சட்டத்தரணி அலிசப்ரிக்கு வழங்கவிருந்த தேசியப்பட்டியல் சந்தர்ப்பத்தை பறித்தெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

# நெடுந்தீவில் காணாமற்போன கிணறு கண்டுபிடிக்கப்பட்டது



நெடுந்தீவு கிழக்கு பகுதியில் இருந்த பொதுக் கிணத்தை காணவில்லை என பொதுமகன் ஒருவரால் நெடுந்தீவு பிரதேச சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து விரைந்து தேடுதல் நடத்திய நெடுந்தீவு பிரதேச சபை தனியார் ஒருவரால் அடாத்தாக அபகரிக்கப்பட்டமையை கண்டறிந்து எச்சரித்துள்ளது.

- இவ்வாறு இணையத் தளச் செய்திகள் தெரிவித்தன.

நெடுந்தீவு கிழக்குப் பகுதியில் மக்களின் பாவனைக்கென வெடிச்சான்கேணியுடன் சேர்த்து பொது கிணறு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கிணற்றை பிரதேச சபையின் அனுமதியின்றி தனியார் ஒருவர் தனது காணிக்குள் அபகரித்து வேலியமைத்துள்ளார்.

அந்தக் கிணற்றுக்கு குளிக்கச் சென்ற ஒருவர் கிணற்றைக் காணாது குழம்பிய நிலையில் பிரதேச சபையிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன் பின்னர் விழிப்படைந்த பிரதேச சபை பொதுக் கிணற்றைத் தனியார் ஒருவர் அடாத்தாக அபகரித்தமையினைக் கண்டறிந்து ஒருவார காலத்தினுள் கிணற்றை விடுவிக்கவும் குறித்த கிணற்றிலிருந்து நீர்ப் பம்பி மூலம் நீர் எடுப்பதை உடனடியாக நிறுத்தவும் உத்த ரவிட்டுள்ளதாக பிரதேச சபை தவிசாளர் நல்ல தம்பி சசிகுமார் தெரிவித்துள்ளாராம்.




# பெண் ஊழியர் கடமை நேரம் உயிரிழப்பு

மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் யாழ் அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி பிரிவில் கடமையாற்றிய பெண் ஒருவர் அலுவலகத்தில் கடமையில் இருந்தபோது உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை அலுவலக மலசலகூடத்தில் திடீரென மயங்கி விழுந்த இந்தப் பெண் ஊழியர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.06.2020 இல் வெளியிடப்பெற்றது.